திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : பொதுவாக மேல் சபைகளுடைய மெம்பர்கள் முறையை மாற்றி அமைக்கிற விதத்திலும், உழவர் களுக்கும், கூட்டுறவு சங்கங்களில் இருப்பவர்களுக்கும், ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கும் சேர்த்து அவர்களுக்கு பிரதிநிதித்துவம் கொடுக்கக்கூடிய விதத்திலும் மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களா ? அப்படியிருந்தால், நமது மாநில அரசாங்கம் அதற்கு என்ன பதில் அனுப்பியது என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எனக்குத் தெரிந்தவரையிலே அவ்வாறு மத்திய சர்க்கார் முயற்சி எடுத்துக்கொண்டதாகத் தெரியவில்லை.

திரு. கே. ஏ. மதியழகன் : ஆசிரியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிப்பது சம்பந்தமாக, சர்க்காரிலே வேலை செய்கின்ற ஆசிரியர் கள் அபேட்சகர்களாக நிற்க முடியாத நிலைமை இருக்கிறது. 'பீபிள்ஸ் ரெப்ரெஸன்டேஷன் ஆக்ட்'டின்படி, அவர்கள் சர்க்காரிலே உத்தியோகம் வகிப்பதினால், அவர்கள் அபேட்சகர் களாக நிற்பதற்கு 'டிஸ்குவாலிபிகேஷனை' இருக்கிறது. ஆகவே, வாக்களிப்பதற்குத்தான் சர்க்காரில் வேலை செய்கிற எல்லா ஆசிரியர்களுக்கும் வசதி இருக்கிறதே தவிர, அவர்கள் அபேட்ச கர்களாக நிற்கமுடியாத ஒரு சிக்கல் இருக்கிறது. இதைப் போக்குவதற்கு சர்க்கார் ஏதாவது ஒரு பரிகாரம் தேடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

அண்ணாமலை சர்வகலாசாலையில் தொழிற்பயிற்சிப் பிரிவு (கடன் வசதி)

*271 கேள்வி.—**திரு. எம். வி. கரிவேங்கடம் :** கனம் கைத் தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அண்ணாமலை சர்வகலாசாலையில் தொழிற் பிரிவில் (Professional course) படிக்கும் மாணவர்களின் பெற்றோர்களாகிய கெஜெட் பதிவு இல்லாத உத்யோகஸ்தர்களும் (N.G.Os. ஆசிரியர் களும் தங்கள் பிள்ளைகள் படிப்பிற்கு கடன் வசதி கோரி அரசாங் கத்திற்கு மனு செய்திருந்தார்களா ?

(இ) அதன்மேல் எடுத்த முடிவு என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : (அ) ஆம்.

(இ) இந்த விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

நில உச்சவரம்புச் சட்டம்

*272 கேள்வி.—**திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி :** கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக் குப் பதிலளிப்பாரா—

(அ) நில உச்சவரம்புச் சட்டத்தின்படி தமிழகத்தில் எத்தனை விவசாயிகள் Authorized Officer -க்கு நிலவிவரக்கணக்கு 1962-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி முடிய அனுப்பியுள்ளனர் ?